ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2373/22 - 2024 පෙබරවාරි මස 27 වැනි අඟහරුවාදා - 2024.02.27
*2373/22 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 27 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### அறிவித்தல்

*2023, திசெம்பர் 01 ஆந் திகதிய 2360/60 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல் ஊடாக, கௌரவ சனாதிபதியவர்களால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரைக்கமைய எனக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள விடயங்கள், அலுவல்கள், திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சட்ட நிறுவனங்கள் மற்றும் அமுல்படுத்த வேண்டிய சட்டங்கள் மற்றும் கட்டளைச் சட்டங்களிடையே கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அலுவல்கள் மற்றும் கடமைகள், நிறுவனங்கள், கருத்திட்டங்கள் மற்றும் கட்டளைச் சட்டங்களை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 45(5) ஆவது உறுப்புரைக்கமைய எனக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள தத்துவங்களுக்கமைய 2023, திசெம்பர் 01 ஆந் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் கௌரவ விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் இராஜாங்க அமைச்சருக்கு ஒப்படைப்பதாக இத்தால் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.*

**ஹரீன் பெர்னாந்து** (பா. உ.),
விளையாட்டுத்துறை மற்றும்
இளைஞர் விவகாரங்கள் அமைச்சர்.

கொழும்பு,
*2024, பெப்புருவரி 09.*

1A - G 41492 — 11 (2024/02)
*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## அட்டவணை இலக்கம் 01

| அலுவல்கள் மற்றும் கடமைகள் | திணைக்களங்கள், நியதிச் சட்ட நிறுவனங்களின் கருத்திட்டங்கள் | அமுல்படுத்த வேண்டிய சட்டங்கள் மற்றும் கட்டளைச் சட்டங்கள் |
|---|---|---|
| 1. விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சரின் அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டலின் அடிப்படையில் "பலம்மிக்க சந்ததியொன்றை உருவாக்குதல்" உடன் தொடர்புடைய சட்டங்கள் மற்றும் கட்டளைச் சட்டங்களுக்கமைய விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் விடயங்களுடன் தொடர்புடைய கொள்கைகளைத் தயாரிப்பதற்கு ஒத்தாசை வழங்குதல், தேசிய வரவு செலவுத் திட்டம், அரச முதலீடுகள் மற்றும் தேசிய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் காணப்படும் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் மற்றும் கீழ் குறிப்பிடப்படும் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சட்ட நிறுவனங்களின் விடயங்கள் மற்றும் அலுவல்கள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய கொள்கைகள், நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை உருவாக்குதல், அமுல்படுத்தல், பின்தொடர் நடவடிக்கைகள் மற்றும் மதிப்பீட்டிற்குட்படுத்தல். | இலங்கை ஊக்க மருந்து தடுப்பு முகவர் நிறுவகம்<br><br>விளையாட்டுத்துறை மருத்துவ நிறுவகம்<br><br>தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவகம் | விளையாட்டுக்களில் ஈடுபடும்போது ஊக்கப் பதார்த்தங்களை எடுத்துக் கொள்ளலுக்கு எதிரான சமவாய சட்டம் (2023 இன் 33 ஆம் இலக்கம்) |
| 2. இளைஞர்கள் சமூக விரோத நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதனைத் தடுத்து பாடசாலைக் கல்வி முதல் இணைப் பாட விதானச் செயற்பாடாகவும், இளைஞர் கழகங்கள், விளையாட்டுக் கழகங்கள் ஊடாகவும் விளையாட்டுச் செயற்பாடுகளை இளைஞர்களுக்கு அறிமுகம் செய்வதற்கான வேலைத் திட்டமொன்றைத் தயாரித்தல். | | |
| 3. கல்வி தவிர உடற்கல்வி மற்றும் விளையாட்டு பாடசாலைப் பிள்ளைகளைக் கவரச் செய்வதனூடாக உடலாரோக்கியம்மிக்க சிறுவர் சந்ததியொன்றை உருவாக்குவதற்கான வேலைத்திட்ட மொன்றை நடைமுறைப்படுத்தல். | | |
| 4. நாடு பூராவும் காணப்படும் கிராமியப் பாடசாலைகளில் விளையாட்டுத் திறமைகளைக் காண்பிக்கும் பிள்ளைகளை சிறு வயதிலிருந்தே இனங்கண்டு அவர்களுடைய திறமைகளை சர்வதேச மட்டம் வரை கொண்டுசெல்வதற்குத் தேவையான உரிய ஊட்டச் சத்துக்கள் மற்றும் பயிற்சி உள்ளிட்ட வசதிகளை வழங்கும் நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல். | | |
| 5. விளையாட்டு ஆலோசகர்கள், பயிற்சியாளர்கள் மற்றும் இயன் மருத்துவர் (பிஷியோதெரபிஸ்ட்) போன்ற விளையாட்டின் முன்னேற்றத்திற்குத் தேவையான வளவாளர்களை உருவாக்குவதற்கான விசேட வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்தல். | | |
| 6. நாடு பூராவும் அமைந்துள்ள விளையாட்டரங்குகள் மற்றும் விளையாட்டு மைதானங்களை அங்கீகரிக்கப்பட்ட தரப்படுத்தலுக்குட் படுத்தி அதற்கேற்ப அவற்றை அபிவிருத்தி செய்தல். | | |
| 7. கிராமிய விளையாட்டுத்துறை அபிவிருத்திக்குத் தேவையான விளையாட்டு உபகரணங்கள் மற்றும் பொருட்களைப் பகிர்ந்தளித்தல். | | |

**அட்டவணை இலக்கம் 01** *(தொடர்ச்சி)*

| *அலுவல்கள் மற்றும் கடமைகள்* | *திணைக்களங்கள், நியதிச் சட்ட நிறுவனங்களின் கருத்திட்டங்கள்* | *அமுல்படுத்த வேண்டிய சட்டங்கள் மற்றும் கட்டளைச் சட்டங்கள்* |
|---|---|---|
| 8. உள்நாட்டு பாரம்பரிய விளையாட்டுக்களை அபிவிருத்தி செய்வதற்கான வேலைத் திட்டமொன்றைத் தயாரித்தல். | | |
| 9. சர்வதேச தரங்களுக்கமைய விளையாட்டுத்துறைக் கல்வியை விரிவுபடுத்தல். | | |
| 10. விளையாட்டுத்துறைக் கல்வி, பயிற்சி மற்றும் ஆராய்ச்சியை அபிவிருத்தி செய்தல். | | |

EOG 02-0191

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.